நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 03 வியாழக்கிழமை (19-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 289

# பேச்சுக்கான அடிப்படை பற்றி பிரபாவுக்கு தொண்டா கடிதம்

## பதிலை எதிர்பார்க்கிறார்

காரைக்குடி, செப்டெம்பர் 19

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமரசப் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமையக் கூடிய குறைந்தபட்ச கோரிக்கைகளை விளக்கி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு, அமைச்சர் எஸ். தொண்டமான் தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

இக்கடிதத்திற்கு திரு. பிரபாகரனிடமிருந்து தாம் பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் அமைச்சர் தொண்டமான், தமிழ் நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம் மங்கலம் கிராமத்தில் உள்ள தனது மூதாதையரின் இல்லத்தில் வைத்து பத்திரிகையாளர் ஒருவருக்கு பேட்டி அளித்தார்.

அந்தப் பேட்டியின் போதே திரு. பிரபாகரனுக்கு தாம் கடிதம் எழுதியிருப்பது குறித்து திரு. தொண்டமான் தகவல் வெளியிட்டார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் என்ற முறையில் சமரச யோசனைகள் அடங்கிய கடிதத்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு மூலம் திரு. பிரபாகரனுக்கு தாம் அனுப்பி வைத்ததாக திரு. தொண்டமான் சொன்னார்.

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தங்களின் திறமையை புலிகள் நிரூபித்துள்ளனர்

### அமைச்சர் தொண்டா பேட்டி

கொழும்பு, செப். 19

''எந்தத் தாக்குதலுக்கும் நின்று சமாளிக்கக்கூடிய வல்லமை மிக்கவர்கள் தாங்கள் என்பதை விடுதலைப் புலிகள் கடந்த எட்டு, ஒன்பது வருடங்களாக நிரூபித்து வந்துள்ளனர்.''

—இவ்வாறு கூறினார் அமைச்சர் தொண்டமான்.

இந்தியாவிலிருந்து கொழும்பு திரும்புவதற்கு முன்னர், சென்னையில் வைத்து அவர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

பேட்டியின் ஒருபகுதி வருமாறு:—

கேள்வி: இந்தியாவில் இருந்து விடுதலைப் புலிகளை வெளியேற்ற புதுடில்லி அரசும் தமிழக அரசும் தீவிரமாக முயற்சித்து வருகின்றன. அதேவேளை விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தில் உள்ள தமிழர் பகுதிகளில் காலூன்ற இலங்கைப் படையினர் திடசித்தம் கொண்டுள்ளனர். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு, நித்திகைக்குளம் அடர்ந்த காட்டுப் பகுதியில் நேற்றும் கடும் சண்டை

மணலாறு, முல்லைத்தீவுப் பகுதிகளில் நேற்றும் கடும் மோதல்கள் இடம்பெற்றதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நித்திகைக்குளம் அடர்ந்த காட்டுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருடன் விடுதலைப் புலிகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் கண்ணிவெடிகளில் ஸ்ரீலங்காப் படையினர் சிக்கித் தடுமாறி வருகின்றனர் என்றும்—

புலிகள் கடுமையாக தாக்குதல் நடத்தும் இடங்களில் இருந்து படையினர் முன்னேற முடியாது பின்வாங்கிச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், முல்லைத்தீவு, மணலாறுப் பகுதிகளில் நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 4 படையினர் கொல்லப்பட்டனர்; 15 படையினர் கடுமையாகக் காயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

(ஓ-எ-5-15)

## வேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

மணலாறு எல்லைப்புறப் போரில் இன்னுயிரை நீத்த 27 வீரவேங்கைகளது புகழுடல்கள் நேற்று குடாநாட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

சுன்னாகம், நெல்லியடி, மட்டுவில் ஆகிய இடங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது இதய அஞ்சலியைச் செலுத்தினர்.

போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ். நகரப் பகுதியில் கடைகள் அரை நேரத்துடன் மூடப்பட்டு, துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

அஞ்சலிக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

இறுதியாக புகழுடல்கள் மாவீரர் மயானங்களில் தகனம் செய்யப்பட்டன.

## எல்லைப் போரில் திங்கள் 25 வேங்கைகள் களப்பலி

யாழ்ப்பாணம், செப். 19

மணலாறு காட்டு எல்லைப் புறத்தில் கடந்த திங்களன்று நடந்த பெரும் போரில் 25 வீர வேங்கைகள் களப்பலியானார்கள்.

அவர்கள் விவரம் வருமாறு:-

டொமின் (தவராணி யோககுரு - வல்வெட்டித்துறை), றோசானி (தவராணி சிவசுப்பிரமணியம் - வல்வெட்டித்துறை), பூபதி (இராசமாணிக்கம் பிறேமலதா - வல்வெட்டித்துறை), காஞ்சனா — (சாந்தி அருமத்துரை - மானிப்பாய்), ஜோதி [தர்மலிங்கம் கௌரி...

[3 ஆம் பக்கம் பார்க்க]

## 'குமாரி' கப்பலில் உணவுப் பொருள்கள்

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்துள்ள 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின.

இந்தக் கப்பலில் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, ஆயிரத்து 80 மெற்றிக் தொன் மா, 300 மெற்றிக் தொன் சீனி, 100 மெற்றிக் தொன் பருப்பு மற்றும் பால்மா வகைகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

அத்துடன் சவர்க்காரம், மண்ணெண்ணெய் ஆகியனவும் வந்துள்ளன. (ஓ-8)

## முச்சந்தி முரளி



அப்ப... உவர் தேர்தல் ஆணையாளர் நடுவிலை சிக்கி முழிக்கப் போறார் போலை...

## நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது!

### பிரேமா செவ்வாயன்று அறிவிப்பு

கொழும்பு, செப். 19

நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

''அவசரகாலச்சட்ட நீடிப்புக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டியுள்ளது.

வடக்கு — கிழக்கில் அமைதியை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியிருக்கிறது.

நாட்டின் அபிவிருத்தி வேலைகளுக்காக திட்டம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் ஆணையாளர் தேர்தல் நடத்தக்கூடாது

### எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, செப். 19

ஜனாதிபதி பிரேமதாஸா நாடாளுமன்றத்தைக் கலைத்த பின்னர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அனுமதிக்கக் கூடாது என்று தேர்தல் ஆணையாளரை எதிர்க் கட்சிகள் கோரியுள்ளன.

எதிர்க் கட்சிகள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வாவிடம் சமர்ப்பித்த மனு ஒன்றில்—

அரசியல் சட்டப்படி தேர்தல் திணைக்களம் இயங்க வேண்டுமே தவிர, சட்டத்திற்கு புறம்பான உத்தரவுகளை ஏற்று தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் இணங்கக் கூடாது — என்று கேட்டுள்ளன.

## ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது!

கொழும்பு, செப். 19

நாடாளுமன்றத்தை கலைத்து புதிய தேர்தல் ஒன்றுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டாலும் அதனை ஆட்சேபித்து ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு ஏதும் தாக்கல் செய்ய முடியாது.

அரசமைப்பின் 35 ஆவது பிரிவு ஜனாதிபதிக்கு இத்தகைய விசேட அதிகாரத்தை வழங்கியிருக்கிறது.

ஜனாதிபதி மீதான அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட பின்னர் ஜனாதிபதி நாடாளுமன்றைக் கலைக்க முடியாது என அரசமைப்பின் 70 ஆவது பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

எனினும் இந்தக் குற்றப் பிரேரணை நாடாளுமன்ற

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உடன் தேவை

தையல் நிறுவனம் ஒன்றிற்கு Partner ஆகவும், ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டி தைக்கக் கூடியவராகவும் உள்ளவர் தேவை. சலுகைகள் வழங்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 349, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18184]

## மணமகள் தேவை

36 வயதுடைய B A ஆசிரியர், நட்சத்திரம் ரேவதி, 8 இல் செவ்வாய், 31 வயது சங்கீத ஆசிரியர், நட்சத்திரம் உத்திரம், நகைக்கடை உரிமையாளர் வயது 34, நட்சத்திரம் உத்திரட்டாதி இவர்களுக்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு; சுவாமியார் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம். (18190)

இந்து. 35 வயதுடைய விரிவுரையாளருக்கு அழகான, படித்த பெண் தேவை. வெளிநாடு கூட்டிச்செல்லத் தக்கவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். G குணரத்தினம் விவாகப் பொருத்துனர், 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (18189)

யாழ். இந்து 30 வயது ல/கேது சனி கிரகபாவம் 45/16, நட்சத்திரம் சுவாதி. நோர்வேயில் தொழில் புரியும் மணமகனுக்கும், 30 வயது T.A க்கும் ல/கேது கிரகபாவம் 73/16, நட்சத்திரம் பூரட்டாதி. படித்த, அழகிய மணமகள் தேவை. ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [18185]

ஆஸ்திரேலியாவில் வேலை பார்க்கும் பிரஜா வுரிமை பெற்ற M Sc [கம்பியூட்டர் விஞ்ஞானம்] பட்டதாரியான செவ்வாய்க் குற்றமுள்ள [பாவம் - 77/16] இந்து மணமகனுக்கு A/L க்குக் குறையாத தராதரமும், 5' 2'' க்குக் குறையாத உயரமும் கொண்ட 24 வயதுக்கு உட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: இல. 352, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18085]

இந்து, வங்கி உத்தியோகத்தர் வயது 32, உதயச் செவ்வாய். இவருக்கு அழகான, படித்தபெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். G குணரத்தினம் விவாகப் பொருத்துனர் 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [18188]

## மணமகன் தேவை

யாழ். இந்து 32 வயது நிரம்பிய P.H.D விரிவுரையாளர். பணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. கிரகபாவம் 5/16 பட்டும் விரும்பத்தக்கது. விரிவுரையாளர், பொறியியலாளர், கணக்காளர் தொடர்பு: ABCDE 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி [18186]

நல்ல குடும்பத்தைச்சேர்ந்த யாழ். பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் அழகிய பட்டதாரி ஆசிரியைக்கு, தீய பழக்கமற்ற 34-44 வ தெல்லைக்குள் அரச/அரச சார்பு ஸ்தாபன உத்தியோக மணமகன் தேவை. இல 816 C/o உதயன். (4299)

## புதிய மீரா நாவல்

பரிசளிக்கக் கூடியவை, ஜுனை விடுதலையை மையமாக, எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை, சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை' இன்னும் உயிரோட்டமான பத்து 'மீரா நாவல்கள்' விற்பனையாகின்றன. [4302]

## ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும்! பியூட்டோ, 39/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0533)

## சுத்தமான வேப்பெண்ணெய்

விளக்கெரிக்க-கிருமி பூச்சி, பீடை தொல்லையிலிருந்து விடுபட வேப்பெண்ணெய். மில்க்வைற் தொழிலகத்திலும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி, இணுவில் அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. [சி/0563]

---

# JAFFNA COLLEGE

AEB A/L (English Medium) First year classes and SEG. GCSE (English Medium O/L) 1992 classes will commence on Tuesday 24th September 1991. Students please apply on forms available at the College office.

**– Principal.**

(C-0565)

---

## யாழ். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள்

### கலை, வர்த்தகக் கல்லூரி,

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

First In Com.
G. A. Q.

ஆரம்பம்: 21 - 09 - 1991
சனி 3-00 மணி

கணக்கியல் — ஸ்ரீ

குறிப்பு: சகல பாடங்களின் விரிவுரைகளும் ஆரம்பமாகின்றன. (சி-0544)

---

## Radio - T. V. - Deck

### புதிய பயிற்சி நெறி

ஆரம்பம்: 23 — 09 — 1991

★ சிறந்த விரிவுரைகள்.
★ இலகு செய்முறைப் பயிற்சி.

விபரங்களுக்கு:

வட. இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி
(North Ceylon Technical Institute),
14, சென் பீற்றேர்ஸ் லேன்,
யாழ்ப்பாணம். (சி 0547)

---

## கலை, வர்த்தகக் கல்லூரி

### C.C.A. A/L 92

### பிரிவு III

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | 7- 8 |
| கணக்கியல் | — | 8- 9 |
| பொருளியல் | — | 9-10 |
| இந்துநாகரிகம் | — | 10-11 |
| அளவையியல் | — | 12- 1 |

ஆரம்பம்: 21 - 09 - 1991
மு. ப. 8.00 மணி

குறிப்பு: முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும். [சி-0541]

---

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்

G. A. Q., 1st in Com.

யாழ். பல்கலைக் கழகத்திற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 21-09-1991
காலை 8 மணி

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 05-10-1991
காலை 8 மணி

நிர்வாகி,

### புதிய உயர் கல்லூரி,

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி 0526)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

மீட்டல்

### 91 DAY CLASSES

[8.30 2.30]

ஆரம்பம்: 30 - 09 - 1991

மு குறிப்பு

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது. [சி-0537]

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

★ மருதனார்மடம் கோட்டம் ★

## தியாகி திலீபனின்

## 4வது நினைவுக் கூட்டம்

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், சுன்னாகம்.

காலம்: 19 - 9 - 1991 வியாழன் பிற்பகல் 3 00 மணி

— நிகழ்ச்சி நிரல் —

★ பேச்சாளர்கள்:
- ★ திரு. அருண் மாஸ்டர்
- ★ திரு. நவண்ணன்
- ★ மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள்.
- ★ திரு. வரதன்ராஜ் [ஆசிரியர்]
- ★ திரு குகன் [ஆசிரியர்]

★ கவி அரங்கம்:

★ பட்டிமன்றம்:

கல்வி அபிவிருத்திப் பங்களிப்பில் விஞ்சி நிற்பவர்கள்

ஆசிரியர்களா? பெற்றோர்களா?

நடுவர்: திரு. மா. சின்னத்தம்பி (யாழ். பல்கலைக்கழகம்)

பங்குபற்றுவோர்:

| ஆசிரியர் | பெற்றோர் |
|---|---|
| 1. திரு. முத்துலிங்கம் | 1. பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை |
| 2. பொன். மதிமுகராஜா | 2. திரு. பாஸ்கரன் |
| 3. திரு. கணேசமூர்த்தி | 3. திரு. குணபாலசிங்கம் |

★ அனைவரும் திரண்டு வருக! ★

[18191]

---

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## அரசாங்க எழுதுனர் சேவை
## கிராம அலுவலர் (G.S.) சேவை

போட்டிப் பரீட்சைக்கான

### 2 ஆவது துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 21 - 09 - 1991 பி.ப. 2 00 மணி

பாடநெறி:

மொழித்தேர்ச்சி, பொதுஉளச்சார்பு, பொதுஅறிவு

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெறலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 30 - 09 - 1991

★ அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 290/- முழுப்பயிற்சிக்கும்
★ விரிவுரைகள் சனியும், ஞாயிறும்.

### ASTAN INSTITUTE

101/10, STANLEY ROAD, JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்) (சி-0522)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# உரிமை பேணுதல்

சர்வதேச மன்னிப்புச் சபை ஆகப்பிந்தி வெளியிட்ட அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளும் மனித உரிமைகளை மீறிவருவதாக குற்றம் சுமத்தியுள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகள் தவறானவை என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா தெரிவித்திருக்கிறார். தம்மை சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசாங்கங்கள் சட்டபூர்வமானவை. மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய முழுப்பொறுப்பும் அவற்றைச் சார்ந்ததே. சகல பிரசைகளின் அடிப்படை உரிமைகளும் பேணப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டிய கடமையும் அரசாங்கங்களைச் சார்ந்ததே.

அவ்வாறிருக்க அரசாங்கமே, அதன் அதிகாரிகளே, படையினரே மனித உரிமைகளை மீறினால்... வேலியே பயிரை மேய்ந்தால்... அதனைக் கண்டிப்பதும், வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதும், தட்டிக் கேட்பதும், நிறுத்தக் கோருவதும் மனித உரிமைகளைப் பேணும் அமைப்பின் கடமை.

அதனையே மன்னிப்புச் சபை செய்து வந்தது. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா அரசாங்கமும் மன்னிப்புச்சபையின் கண்டனத்துக்குரிய நாடுகளின் பட்டியலில் தவறாது, தொடர்ச்சியாக, இடம்பெற்று வருகிறது.

ஆனால் அரசாங்க அமைச்சர்களும், அதிகாரிகளும் குற்றச்சாட்டுகளை மறுத்து வந்தார்கள்.

எனினும் வெளிநாடுகள், குறிப்பாக ஸ்ரீலங்காவுக்குக் கடன் வழங்கும் நாடுகள் மனித உரிமை மீறல்களை கவனத்துக்கு எடுத்து, அவற்றை நிறுத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கத் தொடங்கியதும் கதையை வேறு திசைக்குத் திருப்பினார்கள்!

நாங்கள் மட்டுமா மனித உரிமைகளை மீறுகிறோம்; விடுதலைப் புலிகளும் அல்லவா மீறுகிறார்கள். அப்படி இருக்க எங்களை [அரசை] மட்டும் தனித்துக் குற்றம் சாட்டுவதும், கண்டிப்பதும் ஏன்? — என்று கேட்கத் தொடங்கினார்கள்.

அதன் விளைவாகவோ என்னவோ மன்னிப்புச்சபை விடுதலை இயக்கங்கள் இழைக்கும் மனித உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டத் தொடங்கியுள்ளது. தனது நடைமுறை விதிகளிலும் அதற்கான திருத்தங்களைச் செய்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் வடக்கில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் முழுப் பொறுப்பும் விடுதலைப் புலிகளிடமே வந்துள்ளது. அதாவது அது ஓர் அரசாங்கத்தின் இடத்தைப் பிடித்துள்ளது. அதனால் தான் மன்னிப்புச்சபை புலிகள் இயக்கமும் மனித உரிமைகளைப் பேணுகிறதா என்பதனைக் கண்காணிக்கத் தொடங்கியிருக்கிறது போலும். திரு. மகேந்திரராசாவைச் சந்தித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அதே கணிப்புடனேயே நீதிகளைப் பராமரிப்பதில்- மனித உரிமைகளைப் பேணுவதில்- அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியிருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் போல உலகின் கண்முன்னே மனித உரிமைகளை மீறுபவர்களாகப் பெயரெடுக்காமல் அதனைப் பேணுபவர்களாக விளங்குவதற்கு விடுதலைப் புலிகள் மேலும் முயற்சிகளை மேற்கொள்வார்களாக.

# திலீபன் அஞ்சலி கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பக்கஞுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு, யாழ். குடா நாடு எங்கும் ஏற்பாடு செய்திருக்கும் தொடர் அஞ்சலிக் கூட்டங்களின் வரிசையில் இன்று 19 ஆம் திகதி பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறும்.

★ வலிகாமம் பிரதேசத்துக்குரிய கூட்டம் தெல்லிப்பளை, அளவெட்டி மாவீரர் கலையரங்கத்தில் — இரவு 7 மணிக்கு.

★ தீவுப் பிரதேசத்துக்குரிய கூட்டம் வேலணை தவிடுதின்னிப்பிள்ளையார் ஆலய முன்றலில் - மாலை 6-30 மணிக்கு.

★ வடமராட்சிப் பிரதேசத்துக்குரிய கூட்டங்கள் இலையாணன் சலம் அரங்கில் - முற்பகல் 10 மணிக்கும், புலோலி புற்றளை கோவில் முன்றலில் - பிற்பகல் 4 மணிக்கும்,

★ தென்மராட்சிப் பிரதேசத்துக்குரிய கூட்டம் நுணாவில் லேடிஸ் அரங்கில் – இரவு 7 மணிக்கு. [த]

## சுன்னாகத்தில் திலீபன் விழா

யாழ்ப்பாணம், செப். 19

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்னிட்டு மருதனார்மடம் தனியார் கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள நினைவு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

(ஓ-5)

## வன்னிக்கு புதிய எம். பி

கொழும்பு, செப். 19

வன்னி மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள சுயேச்சைக்குழு (ஈழவர் ஜனநாயக முன்னணி) நாடாளுமன்ற உறுப்பினரின் பதவிக்கு மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி என். அயூப் நியமிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அவர் எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சத்தியப்பிரமாணம் செய்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுயேச்சைக்குழுவின் வன்னி மாவட்டப் பட்டியலில் எம். பியாக பதவி வகித்த ஒரே உறுப்பினரான வே. கைலாய பிள்ளை இராஜினாமாச் செய்த பின்னர் நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்த இடத்துக்கே புதியவர் நியமிக்கப்படுகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ]

## இன்று

மானிப்பாய், செப். 19

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு உடுவில் கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் விளையாட்டு போட்டிகள் இன்று சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற உள்ளன.

(ஓ-90)

## சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 19

யாழ். இந்துக்கல்லூரி தமிழ்ச் சங்கம் நடத்தும் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். [த]

## "இ" அட்டைக்கான உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், செப் 19

''இ'' அட்டை உடையவர்களுக்கு செப்டம்பர் மாதத்துக்குரிய இருவார உலர் உணவு விநியோகம் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பாவனையாளர்கள் இதனை இம் மாதம் 22 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். ''அ'', ''உ'' அட்டை உடையவர்களும் தங்களுக்கான பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## சிப்பாய் கைது

கொழும்பு செப். 19

வவுனியா – பூமாங்குளம் பகுதியில் இரண்டு வர்த்தகர்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சிப்பாய் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படவிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-எ)

## வடமராட்சியில் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 19

வடமராட்சிப் பகுதியில் உணவு முத்திரைக்கான உணவு விநியோகம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் மண்எண்ணெய் முத்திரையின் பெறுமதி 21 ரூபாவில் இருந்து 29 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (த-15)

## தீர்த்தத்திற்கு பாதுகாப்பு

தொண்டமானாறு, செப் 19

ஸ்ரீ வல்விபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தோற்சவத்தையொட்டி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவி கோரப்பட்டுள்ளது.

வழமைபோல தீர்த்தோற்சவத்தை இம் முறையும் கற்கோவளம் கடற்கரையில் நடத்துவதற்கு ஆலய முகாமையாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா இம் மாதம் 22 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 23 ஆம் திகதியும் நடைபெறும். [இ-126]

## தியாகத் தேன்: 5

தியாகப் புயலொன்று
தீரத்துடன் எழுந்தது......
யாகப் பெரு வெள்ளம்
நாடெங்கும் வழிந்தது......
திலீபனின் காவியப்போர்
ஐந்தாம் நாள் தொடர்ந்தது!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபன் நினைவாக)

## பேச்சுக்கான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆனால் அந்தக் கடிதத்தில் உள்ள விவரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்

கடந்த 7 ஆம் திகதி தாம் இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னதாக அக்கடிதத்தைப் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்ததாகவும், தான் கொழும்பு திரும்பியதும் அவரிடம் இருந்து பதிலை எதிர்பார்ப்பதாகவும் திரு. தொண்டமான் சொன்னார்.

''இனப்பிரச்சினை விவகாரத்தில் புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கு ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் இருந்து நீங்கள் அனுமதி பெற்றீர்களா?''—என்று அவரிடம் கேட்டபோது—

''அமைச்சர் என்ற வகையில் அல்ல. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினதும் இலங்கைத் தமிழர்களினதும் தலைவன் என்ற வகையிலேயே பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கிறேன்'' — என்று திரு. தொண்டமான் பதிலளித்தார்.

தமது முயற்சிகள் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு தொடர்ந்து தகவல் தெரிவித்த வண்ணம் இருப்பதாகவும் அவர் சொன்னார்.

''இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் வகுக்கப்பட்ட குறைந்த பட்சக் கோரிக்கைகள் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. சமாதானம் காண்பதில் புலிகளுக்கு உண்மையான அக்கறை இருந்தால் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும்''— என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

''இந்த அடிப்படைக் கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கமும் புலிகளும் இணங்கிக் கொள்ள முடியுமானால் இலங்கையில் உள்ள தமிழர்களின் பெரும்பாலான அபிலாஷைகள் பூர்த்தியாக்கப்பட்டு விடும்; அவர்களது பிரச்சினைகளும் தீரும்''— என்று அவர் மேலும் சொன்னார். [உ-எ-5]

## எல்லைப். .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மிருசுவில்), சிரஞ்சீவி (வசந்தகுமாரி ஏகாம்பரம் - கினிநொச்சி), பவா (நடராசா தனபாலன் - பருத்தித்துறை), திலீப் [தங்கவடிவேலன் கிருஸ்ணகுமார் - சுன்னாகம்), கல்கத் (மார்க்கண்டு மதனரூபன் - புத்தூர்)

டொமினிக் (நடேசன் குமரேசன் - நீர்வேலி), டயானி (நடராசா வாகதன் - மல்லாகம்), சேகர் (ஏகாம்பரம் குணசேகர் - நல்லூர்), கந்தசாமி (வேலுப்பிள்ளை மகேந்திரம் - பருத்தித்துறை], மாதவன் (யோசப் குணதாஸ் - பருத்தித்துறை), சண் (வல்விபுரம் புவனேந்திரராசா - நாவற்குழி), ஈஸ்வரன் (புஸ்பராசா கஜேந்திரன் - வட்டுக்கோட்டை), பிரதீப் (பத்மநாதன் இலச்சுமணன் - கோப்பாய்).

எட்றிக் (சிவகாமி கிருபாகரன் - அல்வாய்), இளஞ்செழியன் [மருதலிங்கம் சதீஸ்குமார் - மல்லாகம்), வண்ணன் (சிவஞானசுந்தரம் ஜீவா - திருமலை), காசன் (அல்லிராசா யோகேந்திரன் - பூநகரி), தோத்திரன் (கந்தப்பு மணியன் - மட்டக்களப்பு), பிரியன் (சின்னத்தம்பி யோகராசா - மட்டக்களப்பு), கிறிஸ்ரி [பாக்கியதுரை தங்கராசா - திருமலை), சுரேஸ் [கந்தையா கனகலிங்கம் - உருத்திரபுரம்).

இதேவேளை—

மணலாறில் நேற்று நடந்த சண்டையில் விஜி (மூத்துவிஸ்வலிங்கம் - துணுக்காய்) என்பவரும், நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இரட்ணம் (நித்தியானந்தசிவம் லகுவரன் - கோண்டாவில்) என்பவரும் வீரமரணமடைந்தனர். (ஓ)

## ஜனாதிபதிக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட முன்னரே நாடாளுமன்றத்தை நிறுத்திவைக்கும் உத்தரவை தாம் வெளியிட்டுவிட்டதால், தாம் இப்போது நாடாளுமன்றத்தைக் கலைப்பதை யாரும் தடை செய்ய முடியாது என்று ஜனாதிபதி பிரேமதாஸா கூறிவருகிறார்.

இந்நிலையில் அவர் நாடாளுமன்றைக் கலைத்தால் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது

தேவையானல் சட்டமா அதிபருக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம் என சட்டத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (உ)

## தங்களின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நெருங்கி விட்டதா?

தொண்டமான்: முடிவு ஏதும் கண்ணுக்கு புலப்படுவதாகக் காணப்படவில்லை. இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலனளிப்பதாகவும் இல்லை. சிறப்பாகக் கூறுவதானால், அந்த நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளன.

### புலிகளின் வல்லமை

எந்தத் தாக்குதலுக்கும் நின்று சமாளிக்கக்கூடிய வல்லமையிருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகள் கடந்த 8, 9 ஆண்டுகளாகக் காட்டி வந்துள்ளனர் என்பதுதான் உண்மை.

ஆனால் இந்த உலகில் எதுவும் நடக்கமுடியும். சோவியத் யூனியனில் இருந்து கம்யூனிஸம் தூக்கியெறியப்படும் என்று யாராவது கற்பனை செய்து பார்த்தார்களா? சோவியத் யூனியன் பிளவுபடும் என்று யாரும் நினைத்துப் பார்த்தார்களா? யூகோஸ்லேவியாவில் இன்று நடப்பதை யாரும் முன்கூட்டி அறிந்திருந்தார்களா?

கேள்வி: விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய— இலங்கை கூட்டு இராணுவ நடவடிக்கை பற்றி இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் இந்திய வெளியுறவு அமைச்சருக்கு மறைமுகமாக உணர்த்தினார் என்று கூறப்படுகிறதே. அப்படி ஒரு யோசனை இருக்கிறதா?

தொண்டமான்: அப்படி ஒரு கூட்டு இராணுவ நடவடிக்கை பலனளிக்க முடியுமானால், இலங்கையை விட்டு வெளியேறும்படி இந்திய அமைதிப்படையைக் கேட்க நேரிட்டிருக்காது. இந்த விஷயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று நான் எண்ணுவதற்குக் காரணமே இல்லை.

கேள்வி: தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண நீங்கள் சில யோசனைகளைக் கூறி இருக்கிறீர்கள். விடுதலைப் புலிகளுடன் பேச இலங்கை அரசும் முன்வந்துள்ளது. இம்முறை பேச்சுவார்த்தை வெற்றிபெற முடியும் வாய்ப்பு உண்டா?

தொண்டமான்: பேச்சுக்குத் தயார் என்று எந்த அரசும் கூறத்தான் வேண்டும். அப்படி முன்வருவது நாட்டில் பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். அரசுக்கு சாதகமாக உலகின் கவனம் திரும்பும்.

பேச்சுக்கள் தோற்கும்போது இரு தரப்பினரும் போருக்கு முஸ்தீபு செய்வர்.

பேச்சுவார்த்தை நடத்த முன்வருவதை எவரும் பாரதூரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பேச்சுவார்த்தைக்கு முன்வருவதை இராணுவ நடவடிக்கையை கைவிட்டதாக அர்த்தம் கொள்ளவும்கூடாது —என்றார். [உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தப்பியோட முயன்ற

## ஈ.என்.டி.எல்.எவ்.தலைவர் தமிழகத்தில் கைதானார்

சென்னை, செப். 19

தமிழ் நாடு திருநெல்வேலி என்ற இடத்தில் ஈ. என். டி. எல். எவ் தலைவர்களில் ஒருவர் எனக் கருதப்படும் சுந்தரம் என்ற நபர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி ரயில் நிலையத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சில நபர்களுடன் பொலீஸார் பேச முயன்றனர். அப்போது அவர்கள் அண்மையிலிருந்த பஸ் நிலையத்தை நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

அவர்களில் ஒருவரை பொலீஸார் மடக்கிப் பிடித்தனர். பிடிபட்டவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலசுந்தரன் [வயது 24] என்றும்- இவர் ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும்- பொலீஸார் தெரிவித்தனர். [த]

### 7 ஈழத்தமிழர் கைது

சென்னை, செப். 19

கடத்தல் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 7 இலங்கைத் தமிழரையும், ஓர் இந்தியத் தமிழரையும் பொலீஸார் அண்மையில் இராமேஸ்வரத்தில் வைத்துக் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

400 லீற்றர் டீஸலை கடத்தி இலங்கைக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்புக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [த-எ]

### புலிகளுக்கு ஆதரவாக திருச்சியில்

## சுவரொட்டிகள் ஒட்டிய மூவர் பொலீஸாரால் கைது

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சுவரொட்டிகளை ஒட்டியதாகக் கூறப்படும் மூன்று பேரை திருச்சியில் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதே போன்ற நடவடிக்கைக்காக பெரியார் மாவட்டம் — சிவகாசியிலும் வைத்து நான்கு பேரை பொலீஸார் கைது செய்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கூட்டம் நடத்த முனைந்ததற்காகக் கைது செய்யப்பட்ட 6 நபர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. [த-எ]

### சென்னை முகாமில் உள்ள

## ஈழத் தமிழரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டதாக அறிவிப்பு

சென்னை, செப். 19

சென்னை அருகேயுள்ள புழல் முகாமில் வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களில் ஒரு குழுவைச் சேர்ந்த 5 பேர் கடந்த புதன்கிழமை தொடக்கம் தாங்கள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாங்கள் சுதந்திரமாக முகாமை விட்டு வெளியே சென்று வரவேண்டும் என்றும் —

முகாமில் பல்வேறு வசதிகளைச் செய்து தர வேண்டும் என்றும் — கோரிக்கை விடுத்தே அவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (த) )

## ஈராக் மீது அமெரிக்கா மீண்டும் தாக்குதல் முஸ்தீபு

வாஷிங்டன், செப். 19

ஈராக் மீது இன்னும் சில நாட்களில் மீண்டும் தாக்குதல் ஒன்றை நடத்துமாறு அமெரிக்க இராணுவத்துக்கு அமெரிக்க அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாக அமெரிக்காவின் என். பி. ஸி. டெலிவிஷன் அறிவித்திருக்கிறது.

ஈராக்கில் உள்ள அணு ஆயுத மற்றும் இரசாயன ஆயுத தளபாடங்களை அழிப்பதற்கு முன்னோடியாக அவற்றை ஐ. நா. குழு பார்வையிட ஈராக் அனுமதிக்க வேண்டும் என்று ஐ. நா. கோரியிருந்தது.

அதற்கு ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் முழுமையாக அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைக் காரணம் காட்டி ஈராக் மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்த அமெரிக்கா தயாராகி வருகிறது என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மீதான இறுதித் தாக்குதலுக்காக அமெரிக்க இராணுவ வீரர்கள் சவுதி அரேபியா தளங்களில் தயாராக இருக்கும்படி அமெரிக்க இராணுவம் கேட்டுள்ளது.

### பாலகிட்ணர் பதில் தலைவர்

கொழும்பு, செப். 19

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக திரு. கே. பாலகிட்ணர் ஜனாதிபதி பிரேமதாஸா முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். (த-எ)

### செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 19

சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்காக யாழ். கல்வித் திணைக்கள ஏற்பாட்டில் நாளை நடத்தப்படவிருந்த செயலமர்வு இம்மாதம் 27ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக செயலமர்வுக்குப் பொறுப்பான இணைப்பதிகாரி திரு. சி. புலேந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)

### மரண தண்டனை

யாழ்ப்பாணம், செப். 19

புங்குடுதீவில் நேற்று ஒருவருக்கு விடுதலைப் புலிகளினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை மதியழகன் (வயது 25) என்பவரே தண்டனைக்கு உள்ளானவர் ஆவார்.

1985 மே மாதம் தமது தாயாரைத் திட்டமிட்டுக் கொலை செய்தது, கொழும்பில் லீலாவதி என்ற பெண்ணின் கொலைக்கு உடந்தையாக இருந்தது ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டிருந்தன. [இ]

## இருதயபுரத்தில் திடீர்த்தாக்குதல்

கொழும்பு, செப். 19

மட்டக்களப்பு, இருதயபுரம் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிறன்று திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர் என்று கொழும்பில் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலை படையினர் முறியடித்துவிட்டனர் என்றும் அந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஓ-5)

### குவைத்திலிருந்து திரும்பியவர்களின் விண்ணப்பங்கள் ஏற்பு

நவாலி, செப். 19

குவைத்திலிருந்து வேலை இழந்து வந்தவர்களின் நிவாரண விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தில் கடந்த சில தினங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இதற்கென அமைக்கப்பட்ட தனியான பிரிவில் காலை முதல் மாலை வரை தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் நீண்ட வரிசையில் நின்று விண்ணப்பங்களை கையளிப்பதைக் காண முடிகிறது (த-100]

### குண்டு வெடிப்பு; 9 ஆவது நபர் மரணம்

கொழும்பு, செப். 19

காத்தான்குடி வாகனக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமுற்று பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த எம். கச்சு முகம்மது [வயது 45] என்பவர் கடந்த திங்களன்று அங்கு மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் இவருடன் சேர்ந்து இதுவரை 9 பேர் இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது (ஓ-5)

### தாக்குதல்

திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அப்பாவி தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்குதல்களை நடத்திவருவதாகத் தெரியவருகிறது.

கடந்த 11 ஆம், 13 ஆம், 16 ஆம் திகதிகளில் மூதூர், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் பல தமிழர்கள் படையினரால் தாக்கப்பட்டனர்.

### நாடாளுமன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தயாரித்துச் செயற்படவேண்டியுள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் எமது அரசின் நடவடிக்கைகளை மக்கள் பூரணமாக ஏற்று வாக்களித்தனர். இக்கட்டத்தில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்தி மீண்டும் மக்களின் ஆணையைப் பெறவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படவில்லை.'

— இப்படி ஜனாதிபதி மேலும் சொன்னார்.

### ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை

## சட்டவிரோதமானது என்று அரசாங்கக் குழு தீர்மானம்

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்ற விசாரணைப் பிரேரணை அரசமைப்புக்கு விரோதமானது, சட்டவிரோதமானது எனக் கூறும் தீர்மானம் நேற்று நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி பிரேமதாசா மீது 116 உறுப்பினர்கள் நம்பிக்கை தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கும் போது அவருக்கு எதிராகப் பிரேரணை கொண்டு வர முயற்சிப்பது அதிர்ச்சியைத் தருவதாகவும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டது.

ஜனாதிபதி மீதான குற்ற விசாரணைப் பிரேரணையைத் தாம் எற்றுக்கொண்டு விட்டதாக சபாநாயகர் ஆகஸ்ட் 28 ஆம் திகதி அறிவித்திருந்தார். ஆனால் தாம் அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்த பின்னர் ஆகஸ்ட் 30 ஆம் திகதி பிரேரணையில் கையொப்பமிட்டதாக திரு. லலித் கூறியிருக்கிறார். இது ஒன்றே அந்தப் பிரேரணை சட்டரீதியாகச் செல்லுபடியாகாது என்பதற்கு நல்ல உதாரணம் என்றும் நாடாளுமன்றக் குழு தனது பிரேரணையில் தெரிவித்திருக்கிறது.

சர்வதேச நாணய நிதியம் இரண்டாயிரம் கோடி ரூபா உதவி வழங்க முன்வந்திருப்பது ஜனாதிபதியின் தலைமைத்துவத்துக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறும் தீர்மானமும் அரசாங்கக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (அ)

## நாணய சபை அரசுக்கு ரூ. 2,000 கோடி நிதி உதவி

சர்வதேச நாணய சபை இலங்கைக்கு இரண்டாயிரம் கோடி ரூபா பெறுமதியான கடனை வழங்க முடிவு செய்திருக்கிறது.

உலக வங்கியின் அனுமதியுடன் இக்கடன் வழங்கப்படவிருக்கிறது.

உலக நிதிநிறுவனம் ஒன்று இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைக் கடனாக வழங்க முன்வந்திருப்பது இதுவே முதல் தடவை என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

2,000 கோடி ரூபா கடனுதவி வழங்கும் முடிவை சர்வதேச நாணய சபையின் இயக்குநர்சபை கடந்தவாரம் எடுத்தது.

இந்தக் கடன் இன்னின்ன திட்டங்களுக்குத் தான் செலவிடப்பட வேண்டும் எனக் குறித்தொதுக்கப் படவில்லை. அதன் நிமித்தம் இப்பணத்தைப் பயன்படுத்தி (தேவைப்படின்) உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியும் என்று நிதி அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. [அ-எ]

### கலந்துரையாடல்

திலீபன் ஞாபகார்த்த தடகள விளையாட்டுப் போட்டி விழா பற்றிய கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9.30 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. [உ)

## மரண அறிவித்தல்கள்

### மாதன் கந்தையா

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பலாலி விமான நிலைய ஓய்வு பெற்ற பாதுகாவலாளருமான மாதன் கந்தையா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (19 - 9 - 91] திருநெல்வேலியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:

மனைவி: யோகம்மா
மகன்: ஜெயந்திரன்(ரகு)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(17924)

### திரு. யோண் துரைசிங்கம்

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரான திரு. யோண் துரைசிங்கம் [காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்] நேற்று (18-9-91] காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருச்செல்வம், திருமதி ஆரோக்கியம் [செல்லம்மா] அவர்களின் புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அனெற்றா, வனஜா, கிங்ஸ்லி, வினோதினி, பாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியதாஸ். அன்ரனி [சீமெந்துக் கூட்டுத்தாபனம்] ஜெபரட்ணம் [ராசா-சுவிஸ்], நீற்றா [ஜேர்மனி], செல்வா ஆகியோரின் சகோதரனும், பாலசுந்தரம், செல்வம் [ஜேர்மனி], லில்லிமலர், நீற்றா, ராணி, கிறீஸ்துராசா [லண்டன்], காலம் சென்ற ஆசிரியை சாந்தம்மா, ராஜேஸ்வரி, யோகராணி, சங்கைக்குரிய சகோதரி தவராணி [அச்சுவேலி கன்னியர் மடம்], செலின், சந்திரகுமாரி, வதனி ஆகியோரின் மைத்துனரும், திரு. சின்னத்தம்பி, காலம் சென்ற திருமதி அரியமுத்து ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நீர்வேலி பரலோகமாதா கோவிலுக்கு அருகாமையிலுள்ள இவரது உறவினரது இல்லத்திலிருந்து இன்று [19-9-91] மாலை 4 மணிக்கு நீர்வேலி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி அன்ரனிப்பிள்ளை

51, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[17925]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 19 - 09 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org